# கடலூர் பெருநகராட்சி

**2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30–ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 28.09.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

1) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை அமைக்கும் பணிக்கு நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு தொடர்பாக பெறப்பட்ட பிரேரணையினை பரிசீலித்து 18.07.2019, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற TURIP 2019–20–க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் கடலூர் நகராட்சிக்கு சாலை பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| **நகராட்சியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை** | **தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி** | **மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி/நில அபிவிருத்திக் கட்டணம்** | **நகராட்சி பங்களிப்பு** |
|---|---|---|---|---|
| கடலூர் | 3.00 | 0.50 | 1.90 | 0.60 |

எனவே மேற்காண் நிதி ஒதுக்கீட்டில் கீழ்கண்ட சாலை பணிகளை மேற்கொள்ள குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதியும், மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Package No. 1

| S. No. | Ward No. | Name of the work | BT/CC | Length | Breadth | Estimate Amount (Rs. In Lakhs) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | Renovation of existing BT surface to RVS Nagar in ward No.14. | BT | 300.00 | 4.00 | 9.00 |
| 2 | 14 | Renovation of existing BT surface to Anna Nagar Housing board in ward No.14. | BT | 750.00 | 4.00 | 21.50 |
| 3 | 17 | Renovation of existing BT surface to Oasis road in ward No.17. | BT | 300.00 | 4.00 | 11.00 |
| 4 | 17 | Providing BT surface to Periyar nagar in ward No.17. | BT | 80.00 | 4.00 | 5.00 |
| 5 | 23 | Renovation of existing BT surface to Mariamman koil street in ward No.23. | BT | 160.00 | 4.00 | 5.00 |
| 6 | 23 | Providing BT surface to Ramalinga nagar in ward No.23. | BT | 300.00 | 4.00 | 9.00 |
| 7 | 24 | Renovation of existing BT surface to Convent street in ward No.24. | BT | 500.00 | 4.00 | 15.00 |
| 8 | 25 | Renovation of existing BT surface to TAR nagar in ward No.25. | BT | 200.00 | 4.00 | 6.00 |
| 9 | 25 | Providing BT surface to Erumaraja street in ward No.25. | BT | 150.00 | 4.00 | 4.50 |
| 10 | 26 | Providing BT surface to Babu Rao street in ward No.26. | BT | 250.00 | 4.00 | 7.50 |
| 11 | 28 | Providing BT surface to Pandurangan street and Sangoli nagar in ward No.28. | BT | 400.00 | 4.00 | 29.00 |
| 12 | 28 | Providing BT surface to Adithya garden in ward No.28. | BT | 240.00 | 4.00 | 14.00 |
| 13 | 23 | Renovation of existing BT surface to Pon nagar in ward No.23. | BT | 370.00 | 4.00 | 11.00 |
| 14 | 23 | Renovation of existing BT surface to Vijaya dass nagar in ward No.23. | BT | 190.00 | 4.00 | 6.00 |
| 15 | 29 | Renovation of existing BT surface to Kumaran nagar in ward No.29. | BT | 380.00 | 4.00 | 11.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | 29 | Renovation of existing BT surface to Kowsalya nagar in ward No.29. | BT | 300.00 | 4.00 | 6.50 |
| 17 | 29 | Renovation of existing BT surface to Rasathi nagar and Thirupurasundari nagar in ward No.29. | BT | 300.00 | 4.00 | 9.00 |
| 18 | 30 | Providing BT surface to Mohan nagar in ward No.30. | BT | 200.00 | 4.00 | 12.00 |
| | | | Total | | Rs. | 192.00 |
| | | | | | | 8.00 |
| | | | Total | | | **200.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **Renovation of existing BT surface and providing BT surface to RVS Nagar,Anna Nagar Housing board,Oasis road,Periyar nagar,Mariamman koil street, Ramalinga nagar,Convent street,Babu Rao street,Pandurangan street and sangoli nagar,TAR nagar,Erumaraja street,Adithya garden,Pon nagar,Vijaya dass nagar,Kumaran nagar,Kowsalya nagar,Rasathi nagar and Thirupurasundari nagar and Mohan nagar at ward No.14,17,23,24,25,26,27,28,29 and 30 in cuddalore municipality.** | | |
| | | **Estimate cost** | **Rs.** | **200.00 Lakhs** |

**Package No. 2**

| S.No. | Ward No. | Name of the work | BT/CC | Length | Breadth | Estimate Amount (Rs. In Lakhs) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 35 | Renovation of existing BT surface to Arul Nagar in ward No.35. | BT | 300.00 | 4.50 | 17.83 |
| 2 | 35 | Renovation of existing BT surface to Balakrishna Nagar in ward No.35. | BT | 100.00 | 4.00 | 5.29 |
| 3 | 35 | Renovation of existing BT surface to Balakrishna Nagar II in ward No.35. | BT | 120.00 | 4.00 | 6.34 |
| 4 | 35 | Renovation of existing BT surface to East Street in ward No.35. | BT | 200.00 | 4.00 | 10.57 |
| 6 | 35 | Providing BT surface to Narayanasaamy Nagar in ward No.35. | CC | 70.00 | 4.00 | 5.18 |
| 8 | 36 | Providing BT surface to Balaji Nagar in ward No.36. | BT | 300.00 | 5.00 | 25.65 |
| 9 | 37 | Providing BT surface to Rope Street in ward No.37. | BT | 100.00 | 4.00 | 5.28 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 10 | 43 | Providing BT surface to Sankaran Streetin ward No.43. | BT | 300.00 | 6.00 | 23.77 |
| | | | | Total | | Rs. | 99.91 |
| | | | | | | | 0.09 |
| | | | | Total | | | **100.00** |
| | | | **Renovation of existing BT surface to Arul Nagar, Balakrishna Nagar,East Street,Narayanasaamy Nagar ,Balaji Nagar, Rope Street ,Sankaran Street of Ward Nos.35,36,37 and 43 in cuddalore municipality.** | | | | |
| | | | **Estimate cost** | **Rs.** | **100.00 Lakhs** | | |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் | | | | | | |

**2)**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/பிபி3, நாள்.05.03.2019—ன் படி, தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019—ல் விதி 14—ல் குறிப்பிட்டுள்ளவாறு 5 ஆண்டுகளுக்கு கட்டிட அனுமதி வழங்க ஏதுவாக புதிய திருத்திய கட்டணம் நிர்ணயம் செய்து 01.04.2019முதல் அமுலுக்கு வரும்படி மாவட்ட அரசிதழில் வெளியுடவும், இதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தால் தீர்மான எண்.2495, நாள்.29.03.2019—ல் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி திருத்திய கட்டணங்களை பிரசுரம் செய்யும்படி நகராட்சியால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ஓ.மு.ஜி3/18916/2019, நாள்.10.07.2019—ல் அரசு கிளை மேலாளர், அவர்களை மாவட்ட அரசிதழில் பிரசரம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது கிளை மேலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். 10/பி.தி.பி/2019, நாள்.17.07.2019—ல் பிரசுரம் செய்ய ஏதுவாக ரூ.6,300/— செலுத்தக் கோரி நகராட்சிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மன்றம் ஒப்புதலளித்தன்படி, 01.04.2019 முதல் அமுலுக்கு வரும்படி பிரசுரம் செய்ய இயலாத காரணத்தால், ஒப்புதலளிக்கப்பட்ட பட்டியலில் சில மாற்றங்கள் செய்து 01.11.2019 முதல் அமுலுக்கு வரும்படி தயார் செய்யப்பட்ட புதிய அறிவிப்பு பட்டியலை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இவ்வறிவிப்பு பட்டியலை பொதுமக்களின் பார்வைக்காக மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், இதற்கான செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**உள்ளாட்சித் துறை அறிவிக்கை**

**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்பிரிவு 321 (2)—ன் கீழ் வெளியிடப்படும் அறிவிப்பு**

இந் நகராட்சியில் 1920—ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்பிரிவு 197, 208—ன் கீழ் கட்டிட அனுமதி அளிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதங்களை இந் நகர்மன்றத்தின் தீர்மான எண்.2596, 2019ம் ஆண்டு ஜீலை திங்கள் 31—ம் தேதிய தீர்மானத்தின் அடிப்படையில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கட்டண விகிதங்களை மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதையும். இக்கட்டண விகிதங்கள் 01.11.2019 முதல் அமுலுக்கு வரும் என்பதையும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடலூர் பெருநகராட்சி திருத்தப்பட்ட புதிய கட்டிட அனுமதி கட்டண விபரம்

| வ. எண். | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் | விபரம் | 01.11.2019 முதல் அமுல் படுத்த உள்ள புதிய கட்டணம் | அளவு விவரங்கள் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 197(1) (B) | கட்டிட அனுமதிக்கான விண்ணப்ப கூர்ந்தாய்வு கட்டணம் | 500.00 | | ஒரு முறை |
| 2 | 197, 200, 201 | சிமெண்ட் ஷீட் , டின் ஷிட், ஆர்.சி.சி. கட்டடம் , மெட்ராஸ் டெரஸ் கட்டிடம் கட்டுதல் | | | |
| | | (அ) குடியிருப்பு | | | |
| | | (i) தரைகீழ் தளம்<br>(ii) தரைதளம்<br>(iii) முதல் தளம்<br>(iv) இரண்டாவது தளம் அதற்கு மேல் | 250.00<br>250.00<br>400.00<br>600.00 | 10 ச.மீ அதன் பகுதிக்கு | 5 ஆண்டுகள் |
| | | (ஆ) குடியிருப்பு அல்லாதது | | | |
| | | (v) தரைகீழ் தளம்<br>(vi) தரைதளம்<br>(vii) முதல் தளம்<br>(viii) இரண்டாவது தளம் அதற்கு மேல் | 300.00<br>300.00<br>500.00<br>700.00 | 10 ச.மீ அதன் பகுதிக்கு | 5 ஆண்டுகள் |
| | | (இ) ஸ்தல ஆய்வுக் கட்டணம் | 100.00 | | ஒரு முறை |
| | | (ஈ) மனை ஒப்புதல் கட்டணம் | 200.00 | | 5 ஆண்டுகள் |
| | | (உ ) திறந்த மாடி படி | 150.00 | ஒன்றுக்கு | 5 ஆண்டுகள் |
| | 207 | (ஊ) கிணறு, ஆழ்துறை கிணறு | 300.00 | ஒன்றுக்கு | 5 ஆண்டுகள் |
| | | ( எ) செப்டிக் டேங்க் | 300.00 | ஒன்றுக்கு | 5ஆண்டுகள் |
| | | (ஏ)மேல்நிலை தொட்டி | 150.00 | ஒன்றுக்கு | 5ஆண்டுகள் |
| 3 | | தெரு ஓரங்களில் போக்கு வரத்திற்கு இடையூறு இல்லாத வண்ணம் கட்டிட சாமான்கள், கட்டிட தளவாட பொருள்கள் கொட்டி வைக்க | மேற்கண்ட கட்டிட அனுமதிக் கட்டணத்தில் 25 % | ஒரு முறை மட்டும் | 5ஆண்டுகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | | கட்டிட அனுமதிக்கு முன் கட்டிட வேலை துவங்கப்பட்டு இருந்தால் | மேற்கண்ட கட்டிட அனுமதிக் கட்டணத்தில் 50 % | ஒருமுறை மட்டும் | |
| 5 | 201 | சுற்று சுவர்களுக்கு உயரம் 2.00 மீட்டருக்குள் இருக்க வேண்டும் | 120.00 | 10 மீ நீளம் அதன் பாகத்திற்கு | 5ஆண்டுகள் |
| 6 | | பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த அனுமதி கட்டணம் | 20.00 | ஒரு சதுர மீட்டருக்கு | 1 ஆண்டு |
| 7 | | அங்கீகரிக்கப்ட்ட கட்டிட வரைபட நகல் | 200.00 | ஒரு முறை | |
| 8 | 215 A(3), 303 | மழைநீர் சேகரிப்பு கட்டுமானம் கட்டுதல் முன் வைப்புத் தொகை | 2000.00 | | 5 ஆண்டுகள் |
| 9 | 204 | கட்டிட அனுமதி புதுப்பிக்க | முதலில் செலுத்தப் பட்ட அனுமதி கட்டணம் | 3 ஆண்டுகள் (ஒருமுறை மட்டும்) | |
| 10 | | மனைப்பிரிவு அங்கீகரிக்க ஏக்கர் ஒன்றிற்கும் அதன் பாகத்திற்கும் | 7500.00 | | ஒரு முறை மட்டும் |
| 11 | | கட்டிட வரைவாளர்கள் உரிமம் அனுமதி கட்டணம் | 5000.00 | | 5 ஆண்டுகள் |
| | | புதுப்பித்தல் | 5000.00 | | 5 ஆண்டுகள் |
| | | இடத்தை அளந்து காண்பிக்க ஒரு நகரளவு எண்ணுக்கு | 500.00 | | ஒரு முறைக்கு |
| | | நகர சர்வே புலப்பட நகல் | 200.00 | | ஒரு முறைக்கு |
| | | ‘அ’ பதிவேடு நகல் | 200.00 | | ஒரு முறைக்கு |
| | | நகர வரைபட நகல், மனைப் பிரிவு வரைப்பட நகல் திட்ட வரைபட சுருக்க நகல் தனித் தனியாக ஒவ்வொன்றிற்கும் | 500.00 | | ஒரு முறைக்கு |
| 12 | 250 | மின் மோட்டார் பயன்படுத்துதல் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத மற்ற உபயோகத்திற்கு ஒரு கட்டிடத்தில் உள்ள ஒவ்வொரு மோட்டார்களுக்கும் தனித்தனியாக | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (அ) ஒரு குதிரை வேகம் அதன் பாகத்திற்கு | 100.00 | | 5 ஆண்டுகள் |
| | | (ஆ) 2 முதல் 10 வரை | 400.00 | | 5 ஆண்டுகள் |
| | | (இ) 11 முதல் 25 வரை | 1000.00 | | 5 ஆண்டுகள் |
| | | (ஈ) 26 முதல் 50 வரை | 2000.00 | | 5 ஆண்டுகள் |
| | | (உ) 51 முதல் 100 வரை | 4000.00 | | 5 ஆண்டுகள் |
| | | (ஊ)100க்கு மேல் ஒவ்வொரு குதிரை வேகத்திற்கும் | 50.00 | | 5 ஆண்டுகள் |
| 13 | 1 83 (2) | நகராட்சி சாலைகள், பொது இடங்களில் தற்காலிக பந்தல் அமைத்துக் கொள்வதற்கு | 200.00 | 10 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஒரு மாதத் திற்கும் அதற்கும் குறைந்தது |
| 14 | | A) அரசு அனுமதியுடன் நகராட்சிக்கு சொந்தமான மஞ்சக்குப்பம் மைதானத்தில் சர்க்கஸ் நடத்துவதற்கு | | | |
| | | அ) வாடகை | 3000.00 | | நாள் |
| | | ஆ) வைப்புத் தொகை | 20000.00 | | |
| | | இ) சுத்தம் செய்வதற்கான தொகை | 5000.00 | | |
| | | B)அரசு அனுமதியுடன் நகராட்சிக்கு சொந்தமான மஞ்சக்குப்பம் மைதானத்தில் பொருட்காட்சி மற்றும் கண்காண்டசி நடத்துவதற்கு | | | |
| | | அ) வாடகை | 4500.00 | | நாள் ஒன்றுக்கு |
| | | ஆ) வைப்புத் தொகை | 50000.00 | | |
| | | இ) சுத்தம் செய்வதற்கான தொகை | 5000.00 | | |
| | | C) அரசு அனுமதியுடன் நகராட்சிக்கு சொந்தமான மஞ்சக்குப்பம் மைதானத்தில் ஒரு வார காலத்திற்கு உட்பட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு | | | |
| | | அ) வாடகை | 2500.00 | | நாள் ஒன்றுக்கு |
| | | ஆ) வைப்புத் தொகை | 1000.00 | | |
| | | இ) சுத்தம் செய்வதற்கான தொகை | 5000.00 | | |
| 15 | | அரசு அனுமதியுடன் தனியார் இடத்தில் சர்க்கஸ், பொருட்காட்சி, கண்காட்சி நடத்துவதற்கு | 5000.00 | | ஒரு மாதத்திற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | | அரசு அனுமதியுடன் தனியார்/ நகராட்சி இடத்தில் சர்க்கஸ், பொருட்காட்சி, கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அமைக்கப்படும் தற்காலிக பந்தல், தகர ஷெட்டு, துணிப் பந்தல் போன்ற அமைப்புகளுக்கு | 50.00 | 10 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு ம் | ஒரு மாதத்திற்கும் அதற்கு குறைந்தது |
| 17 | | சட்டபிரிவு 217(2)–ன்படி பொழுது போக்கு நிகழ்ச்சிகள் அல்லாத நிகழ்வுகளுக்கு தற்காலிக கூரை ஷெட், பந்தல் தனியார் இடங்களில் அமைக்க அனுமதி கட்டணம். | 200.00 | 10 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு ம் | மூன்று மாதத்திற்கு |

அ.கு. ஏற்கனவே மன்றம் ஒப்புதலளிக்கப்பட்டதன்படி 01.04.2019 முதல் அமுலுக்கு வரும்படி பிரசுரம் செய்ய இயலாத காரணத்தால், 01.11.2019 முதல் அமுலுக்கு வரும்படி புதிதாக தயார் செய்யப்பட்ட பட்டியலை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவும், இதற்கான செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.2390/2019/எப்2)

3) கடலூர் பெருநகராட்சி, புதுப்பாளையம் கிராமம், வார்டு எண் 6, பிளாக் எண் 4 நகரளவு எண்கள் 83/2b, 83/2c1, 83/2c2- ல் பரப்பளவு 3117.05 ச,மீ., பாரதி சாலை மற்றும் பழைய ஆஸ்பத்திரி சாலை சந்திப்பில் உள்ள இடத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 6648/ 2018/ சிடி, நாள் 08.07.2019ல் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் (Public & Semi Public ) பொது மற்றும் பகுதி பொது என்று உள்ளதை நீக்கம் செய்து வணிக உபயோக நிலப்பயன் மாற்றம் செய்து அவ்விடத்தில் திரையரங்குகள் உடன் கூடிய பல மாடி வணிக வளாகம் கட்டி உறுப்பினர் செயலர் (பொ) கடலூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் திட்ட அனுமதி வழங்க ஏதுவாக சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப இசைவளிக்கப்பட்டு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வரைபடத்தில் கண்டுள்ள 314.63 ச.மீ.ல் A முதல் F வரை எல்லையிடப்பட்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை நகராட்சிக்கு தானமாக பத்திரவு பதிவு செய்து அதன் விபரம் அளிக்க உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் கடிதம் ந.க. எண் 972/ 2017/க.உ.தி.கு. நாள் 24.07.2019ல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு இதன் நகல் நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மனுதாரருக்கு நகராட்சிக்கு தருவதற்கு 13.09.2019ம் தேதிய கடிதத்தில் சம்மதம் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு (OSP) A முதல் F வரை எல்லையிடப்பட்ட 314.63 ச.மீ. பொது உபயோக இடத்தினை தானப்பத்திரம் மூலம் நகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட தொழில் நுட்ப இசைவு அளிக்கப்பட்ட வவரபடத்தில் கண்டுள்ள திறந்தவெளி இடத்தினை நகராட்சி தானமாக பெற்றுக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண் 6804/ 2018/ எப் 1)

| | |
|---|---|
| 4) | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறைதீர்க்கும் திட்ட முகாம், தமிழ்நாடு முழுவதும் நடத்தி பொதுமக்களின் குறைகளை கண்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்ட முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை செவ்வனே செய்து முடிக்க வேண்டும் எனவும், மேற்படி குறை தீர்க்கும் மனு நாள் நடைபெறும் தேதி மற்றும் இடங்கள் பொதுமக்களுக்கு எளிதில தெரியும் வண்ணம் ஆட்டோ விளம்பரங்கள், துண்டு பிரசுரங்கள், பேனர்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் நகராட்சி விளம்பரப்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 24.08.2019ம் தேதியில் அறிவுறுத்தப்பட்டது. எனவே நகராட்சி பகுதியில் முகாம் முடியும் வரை (31.08.2019 வரை) நான்கு ஆட்டோக்கள் மூலம் விளம்பரம் செய்யவும், பதினைந்து இடங்களில் பேனர்கள் Frame உடன் வைக்கவும், 200 எண்ணிக்கையிலான சுவரொட்டிகள் மற்றும் 5000 எண்ணிக்கை துண்டு பிரசுரங்கள் தயார் செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யவும், இதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.40000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் 27.08.2019 முதல் நடைபெற இருப்பதால், மேற்கண்ட பணிகளுக்கு அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் அங்கீகரிக்கலாம். |
| அ.கு. | 1) அனுமதிக்கலாம்<br>2) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் 27.08.2019 முதல் தொடங்க இருப்பதால், அவசரஅவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். |
| 5) | கடலூர் பெருநகராட்சியின் 2018–19ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை வரைவு மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். |
| 6) | கடலூர் பெருநகராட்சி நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்கு2017–18, 2018–19 மற்றும் 2019–20 ஆகிய காலத்திற்கான சீருடைப்படி வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.<br>தற்பொழுது அரசு ஆணை 306 நிதி (ஊ.கு.) துறைகள் 13.10.2017 ன்படி, ஏற்கனவே வழங்கப்பட்ட சீருடைப்படி தொகைக்கு உயர்வு அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி 2017–18, 2018–19 மற்றும் 2019–2020 ஆகிய காலங்களுக்கு கீழ்க்குறிப்பிட்டவாறு வழங்கலாம். |

| நகர சுகாதார செவிலியர்கள் திருமதிகள் | 2017–18 | 2018–19 | 2019–20 | கூடுதல் |
|---|---|---|---|---|
| என்.சித்ரா | 2000 | 2000 | 2000 | 6000 |
| எல்.சாந்தி | 2000 | 2000 | 2000 | 6000 |
| எஸ்.பியூலா ஜீவரத்தினம் | 2000 | 2000 | 2000 | 6000 |
| ஆர்.ஜெயந்தி | 2000 | 2000 | 2000 | 6000 |
| என்.ராணி | 2000 | 2000 | 2000 | 6000 |
| ஆர்.ரேவதி | 2000 | 2000 | 2000 | 6000 |
| எஸ்.பச்சையம்மாள் | 2000 | 2000 | 2000 | 6000 |
| எஸ்.ஜோதிமணி | 2000 | 2000 | 2000 | 6000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எம்.சாவித்திரி | 2000 | 2000 | 2000 | 6000 |
| | ஆர்.லட்சுமி | 2000 | 2000 | 2000 | 6000 |
| | | **20000** | **20000** | **20000** | **60000** |
| | பகுதி சுகாதார செவிலியர்கள் | | | | |
| | டி.சிவானந்தவள்ளி | 2400 | 2400 | 2400 | 7200 |
| | டீனாசுசில்குமாரி | 2400 | 2400 | 2400 | 7200 |
| | **மொத்தம்** | **24800** | **24800** | **24800** | **74400** |

மேற்படி பணியாளர்களுக்கு சீருடைப்படி தொகை ரூ.74400/– வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**7)** உறுப்பினர் செயலர், கடலூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க. எண் 1930/ 2018 / க.உ.தி.கு. நாள் 10.06.2019ம் தேதிய கடிதத்தில் கடலூர் நகரம், வன்னியர்பாளையம் கிராமம் (வண்ணாரப்பாளையம்) வார்டு 6, பிளாக் 66, நகரளவு எண் 2639 (பழைய நகரளவு எண் 1076) ஆகியவற்றில் 8310.50 ச.மீ. (2.03 ஏக்கர்) பரப்பு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப அனுமதி வழங்க ஏதுவாக உத்தேச சாலைகள் அமைப்பு வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டு, இவ்வரைபடத்தில் உள்ள சாலைகள், பொது ஒதுக்கீடு 350 சதுர அடி குடிநீர் வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை மனைப்பிரிவுதாரர் அமைத்தபின் நகர் மன்ற ஒப்புதலுடன் நகராட்சிக்கு தானமாக பத்திரம் பதிவு செய்து பெற்று அதனை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தேச சாலை வரைபடத்தில் உள்ள தார் சாலை வசதி, தெருவிளக்கு வசதி, குடிநீர் பகிர்மான குழாய், மழைநீர் வடிகாலுக்கான வாய்க்கால் மற்றும் சிறுபால வசதிகள் ஆகியவை நல்லமுறையில் செய்யப்பட்டுள்ளது என்றும், இதனை நகர்மன்ற ஒப்புதல் பெற்று தானமாக எடுத்துக் கொள்ளலாம என, இந்நகராட்சி உதவிப் பொறியாளரின் 09.09.2019ம் தேதியில் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே உத்தேச சாலை மற்றும் பொதுஒதுக்கீடு 350 சதுர அடி இடத்தையும் மனைப் பிரிவுதாரரிடமிருந்து நகராட்சி தானமாக பெற்றுக் கொள்ள மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.கு.** உதவிப் பொறியாளரின் குறிப்பின்படி, உத்தேச சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ள சாலைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளையும் பொது ஒதுக்கீடு 350 சதுர அடி இடத்தையும் ம்னைப் பிரிவுதாரரிடமிருந்து நகராட்சி தானமாக பெற்றுக் கொள்ளலாம்.

**8)** கடலூர் பெருநகராட்சி 2018–19ம் ஆண்டு முதல் 2020–21 வரை மூன்றாண்டு குத்தகை இனம் 15 திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு பெட்டக அறையில் கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்க 16.3.18, 23.3.18, 28.3.18, 05.04.2018, 16.4.18, 15.06.18, 04.07.18, 20.07.18, 02.08.2018, 07.12.18, 29.01.2019 11.02.2019, 18.07.2019, 31.07.2019, 06.08.2019 மற்றும் 14.08.2019 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறபபடவில்லை. கீழ்க்கண்டவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்துகொண்டு, அதற்கெதிரே குறிப்பிட்டவாறு ஏலம் கோரினார்கள். அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரிய தொகை |
|---|---|---|
| 1 | திரு.ராமலிங்கம், எம்,. 23 ஜனலட்சுமி நகர், செம்மண்டலம், கடலூர் | ரூ.51,000/– (ரூபாய் ஐம்பத்தோராயிரம் மட்டும்) |
| 2 | திரு.எம்.விஜயன், த/பெ.மோகன், 99/22 புதுநகர், செல்லங்குப்பம், கட.லூர். | ரூ.51,100/– (ரூபாய் ஐம்பத்தோராயிரத்து நூறு மட்டும்) |

| | |
|---|---|
| | இந்த குத்தகை இனம் கடந்த 2017–2018ம் ஆண்டு ரூ.24,628/– க்கு ஏலம் போனது. 2018–19ம் ஆண்டுக்கு ஏலம் போகவில்லை. துறை மூலம் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் எநத ஒரு பயணியும் பாதுகாப்பு பெட்டக அறையை பயன்படுத்த முன்வரவில்லை. இந்த இனத்திற்கு அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் பயனற்ற நிலையில் உளளது. மேற்படி ஏலக் கேள்வி கடந்த ஆண்டின் குத்தகை தொகை ரூ.25859/–ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்றாண்டின் சராசரி குத்தகை தொகை ரூ.24648/–ஐ விட கூடுதலாகவும் உள்ளது.<br>எனவே மேற்கண்ட வரிசை எண் 2ல் உள்ள திரு.விஜயன் என்பவரின் உயர்த்தப்பட்ட ஏலக் கேள்வு ரூ.51100/– (ரூபாய் ஐம்பத்தோராயிரத்து நூறு மட்டும்) ஏற்று குத்தகை உரிமம் வழங்கலாம் . மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | அ) அனுமதிக்கலாம்<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவாகள் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். |
| 9) | கடலூர் பெருநகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள தனியார் கல்வி பள்ளியினை ஆய்வு செய்து வழங்கப்படும் சுகாதாரச் சான்று ஆய்வு கட்டணமாக ரூ.100/– என நகராட்சி துவக்க காலமுதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பெருநகராட்சியாக வளா்ந்த போதிலும் பழைய கட்டணம் வசூல் செய்யப்படுவதை உயர்த்தி ரூ.500/– என சுகாதாரச் சான்றுக்கான ஆய்வுக் கட்டணம் நகராட்சி கரவூலம் மூலம் வசூல் செலுத்தி நகராட்சிக்கு நேரடி வருவாய் ஈட்டவும் வழிவகை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். (7560/ எச் 1 / 2019) |
| 10) | கடலூர் பெருநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில், சுகாதார பொரட்கள் இருப்பு இல்லாமல் உள்ளதால், வரும் மழைக்காலத்தில் முன்னைச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால், தேவையான சுகாதாரப் பொருள்கள் இருப்பு வைத்திட பொருள் வாங்கிட மன்றத் தீர்மான எண் ல் நாள் 08,2019ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வழங்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.<br><br>(table below)<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட குறைவாக உள்ள வரிசை எண் 1ல் காணும் திரு.கே.மாரிமுத்து, பதிவு பெற்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம். மன்றத்தின்பார்வைக்கும் ஒப்புதலுக்கும். |
| அ.கு. | அவசியம் அவசரம் கருதி மன்றம் ஏற்கலாம். செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந,க, 6512/ எச் 1 / 2019) |

| ஒப்பந்ததாரா் பெயர் | பொருள் | அளவு | மதிப்பீடு ரூ. | காலம் |
|---|---|---|---|---|
| 1) திரு.கே.மாரிமுத்து, பதிவு பெற்ற ஒப்பந்ததாரா் | நீர்த்த சுண்ணாம்பு | 1 டன் | 8000/– | ஒரு வாரம் |
| | பிளிச்சிங் பவுடர் | 1 டன் | 35000/– | ஒரு வாரம் |
| 2)திரு.டி.சேஷாத்திரி முதல் வகுப்பு ஒப்பந்ததாரா் | நீர்த்த சுண்ணாம்பு | 1 டன் | 11000/– | ஒரு வாரம் |
| | பிளிச்சிங் பவுடர் | 1 டன் | 39000/– | ஒரு வாரம் |

**11)** கடலூர் பெருநகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள பயன்பட்டு வருகின்ற சிறிய வாகனங்கள் (11 துப்புரவு பிரிவுகளிலும்) 2019–2020க்கான தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், கீழ்க்கண்ட வாகனங்களுக்கு பழுது நீக்கம் செய்ய வேண்டும்.

| வ.எண் | வாகனத்தின் எண் | வ.எண் | வாகனத்தின் எண் |
|---|---|---|---|
| 1) | TN 31 BA 2565 | 7) | TN 31 BD 9747 |
| 2) | TN 31 BD 9750 | 8) | TN 31 BD 9738 |
| 3) | TN 31 BD 9765 | 9) | TN 31 BD 9734 |
| 4) | TN 31 BD 9760 | 10) | TN 31 F 8183 |
| 5) | TN 31 BD 9754 | | TN 31 F 8168 Trailor |
| 6) | TN 31 BD 9772 | | |

மேற்கண்ட 10 வாகனங்கள் பழுது நீக்கம் செய்ய வேண்டி உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.650000/– (ரூபாய் ஆறு இலட்சத்து மைம்பது ஆயிரம் மட்டும்) வருவாய் நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.கு.** அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். **(6809/ எச் 1/ 2019)**

**12)** கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான திருப்பாதிரிப்புலியூர் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைக்கு அருகில் கடை எண் 4 வரிவிதிப்பு எண் 093 / 321 திரு.சுகுமாறன் பெயரில் உள்ளது. இக்கடைக்கு உரிமம் புதுப்பித்து 15% கீழ்க்கண்டவாறு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பழைய வாடகை தொகை | காலம் | 15 % உயர்வு செய்யப்பட்ட விபரம் | மன்ற தீர்மான எண் மற்றும் நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | ரூ.570/– | 01.04.2012 முதல் 31.03.2015 வரை | ரூ. 656/– | 358 நாள் 02.07.2012 | |
| 2 | ரூ.656/– | 01.04.2015 முதல் 31.03.2018 வரை | ரூ. 2185/– | 1069 நாள் 08.02.2016 | ரூ.656/–லிருந்து 15 % வாடகை உயர்வு செய்யப்பட்டு ரூ.754/– என கேட்பு எழுப்பப்பட வேண்டும். ஆனால் ரூ.2185/– என வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ளது. |

எனவே 01.04.2015 லிருந்து 31.03.2018 வரையிலான காலத்திற்கு ரூ.656–லிருந்து 15 % வாடகை உயர்வு செய்து ரூ.754/– (ரூபாய் எழுநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) என திருத்தம் செய்யப்பட வேண்டும். தற்போது உள்ள கேட்பு ரூ.81312 லிருந்து ரூ.27144/– என மாற்றம் செயபப்பட வேண்டும். வித்தியாசத் தொகை ரூ.54168/– கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** அனுமதிக்கலாம்.

**13)** கடலூர் பெருநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனங்களின் டயர்கள் தேய்மானம் அடைந்துள்ளதால், வரும் மழைக்காலங்களில் பணி செய்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேய்ந்த டயர்கள் மாற்றிட வேண்டியுள்ளதால், TN 31 F 984 டிப்பர் லாரி, TN 31 BD 9036 காம்பாக்டர் லாரி, TN 31 B 0986 வாகனத்திற்கு டயர்கள் புதியதாக வாங்கிட உத்தேச செலவினமாக ரூ.4.00 இலட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாககத்திற்கு டயர்கள் வாங்கிட அவசியம் அவசரம் கருதி உள்ளுர் பணிமனையில் உத்தேச மதிப்பீடு பெற்று செய்யவும், உத்தேச செலவினத்தினை வருவாய் நிதியில்இருந்து செலவிடவும் மன்றத்தின ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம். (7186/ 19/ எச் 1)

**14)** உள்ளாட்சி தேர்தல் 2019க்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு தற்போதுள்ள மோடம் வேகம் போதாத காரணத்தினால் புதிதாக FTTH (Optical Fibre Cable) Modam வாங்கி பொருத்துவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | தமிழ் சிஸ்டம்ஸ், கடலூர் | 9800/– |
| 2) | மெர்குரி டெக்னாலஜி, கடலூர் | 10300/– |
| 3) | ஹைவின் டெக்னாலஜி, விழுப்புரம் | 10700/– |

விலைப்புள்ளி வழங்கியவர்களில் குறைநத விலைப்புள்ளி வழங்கிய தமிழ் சிஸ்டம்ஸ், கடலூர் அவர்களுக்கு (Modem) இணைப்புக் கருவி பொருத்துவதற்கு பொருள் வழங்கும் உத்தரவு வழங்க மன்றத்தின் முன்அனுமதி பெற்று பணியை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1) அனுமதிக்கலாம்

2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தமிழ் சிஸ்டம்ஸ், கடலூர் அவர்களுகளு பொருள் உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**15)** கடலூர் பெருநகராட்சியில் கணினி அறையில் பழுதான கணினி 3 எண்ணிக்கை, மானிடர் 4 எண்ணிக்கை மற்றும் கீபோர்டு மற்றும் மவுஸ் 10 எண்ணிக்கையில் பழுதுநீக்கம் செய்து தருவதற்கு மன்றத்தின் அனுமதி பெற்று 16.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | மெர்குரி டெக்னாலஜி, கடலூர் | 49425.00 |
| 2) | தமிழ் சிஸ்டம்ஸ், கடலூர் | 48750.00 |
| 3) | ஹைவின் டெக்னாலஜி, விழுப்புரம் | 49700.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தமிழ் சிஸ்டம்ஸ், கடலூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க, அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணியை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1) அனுமதிக்கலாம்

2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தமிழ் சிஸ்டம்ஸ், கடலூர் அவர்களுகளு பொருள் உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**16)** கடலூர் பெருநகராட்சி, திருப்பாதிரிப்புலியூர் கிராமம், தொகுதி எண் 5, பகுதி எண் 22, நகரளவு எண்கள் 719/1, 720/5 ல் (4073.0 ச.மீ.,) 1.00 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வேண்டி மனுதாரர் திரு.சண்முகம் அவர்களால்

விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, 16.11.2017 அன்று உறுப்பினா செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதில், உறுப்பினர் செயலர், அவர்களின் கடிதம் ந.க. எண் 346 / 2019/ க.உ.தி.கு. நாள் 27.06.2019ன்படி குகடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு வரைபட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தவும் குடிநீர் வசதி, தெரு விளக்கு மற்றும் வடிகால் வசகிளை நகராட்சி ஆணையரின் கருத்திற்கொப்பவும், நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்நது, மேற்படி வசதிகளை நல்ல முறையில் செய்து முடித்துள்ளதாக இந்நகராட்சி பொறியியல் பிரிவின் 26.08.2019ம் தேதிய அறிக்கையின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது. எனவே தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகள் இடத்தினை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் நகராட்சி வசம் பெற்றுக் கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தின்படி அதில் உள்ள சாலைகள், பொது ஒதுக்கீடுகள் மற்றும் மூலை முடக்கு இடத்தினை மனுதாரர் நகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பதை ஏற்றுக் கொள்ளலாம். ந.க. எண் 9758/ 2018/ எப் 2

17) கடலூர் பெருநகராட்சிக்கு தேவையான கணினி மற்றும் கணினி சார்ந்த அச்சு சாதனங்கள் கீழ்க்கண்ட (Configuration) விவரங்கள் அடங்கிய சாதனங்களை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் வாங்க உத்தேசிக்கப்ப்ட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Computer (i5, 8 GB, 1TB, HDD Monitor 21.5) | 10 எண்ணிக்கை |
| 2 | Laserjet printer A3 all in one | 04 எண்ணிக்கை |
| 3 | Laserjet printer Basic Model | 03 எண்ணிக்கை |
| 4 | Scanner High speede vertical scanner | 01 எண்ணிக்கை |

மேற்கண்ட சாதனங்களை அரசு விலையில் (Government E-Market place price) கொள்முதல் செய்யும் பணி ரூ.988750./– மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

18) கடலூர் பெருநகராட்சி சாதாரண தேர்தல் 2019க்கு நகராட்சியில் 45 வார்டுகளுக்கும் வாக்காளர் பட்டியல் தயார் செய்ய, மாநில தேர்தல் ஆணைய 19.09.2019 கடிதத்தில் (ந.க. எண் 3113/ 2019/ தோபொ1) கால அட்டவணை வெளியிட்டு செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சிக்குரிய 45 வார்டுகளுக்கு (1 முதல் 77 வரை) 1 ஆண் / பெண் வார்டு என தொடரப்பட்டு 77 அனைத்து வாக்காளர் என முடியும் வகையில் வார்டுகள் பிரிக்கப்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

மேற்படி தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல், கள ஆய்விற்கு உட்படுத்தி புற அலுவலர்கள் பணி மேற்கொள்ள ஏதுவாக, தற்பொழுது இரண்டு பிரதிகள் நகல் மேற்கொள்ளவும், அதற்கான செலவு ரூ.10000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அ.கு.** | 1) அனுமதிக்கலாம்.<br>2) தேர்தல் பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **19)** | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கப்படும் **20** மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் கிருமிநாசினி கலந்து குடிநீர் விநியோகம் செய்திட **5000** கி.கி. பிளீச்சிங் பவுடரை வெளிமார்க்கெட்டிலிருந்து கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**2,00,000/–** (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும) க்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் நிதியிலிருந்த மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எ.ர்நோக்கி தனிஅலுவலர் , ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | **1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையா அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **20)** | உள்ளாட்சி தேர்தல் **2019**ஐ முன்னிட்டு, கடலூர் பெருநகராட்சி, **45** வார்டுகளுக்கும் வாக்காளர் பட்டியல் புகைப்படத்துடன் கூடியது இணையதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டது, சுமார் **5600** பக்கங்கள் ஏ**4** அளவு கொண்டது, நகல் எடுத்து இரண்டு பிரதிகள் வழங்கும் பணிக்கு மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகள் கோரப்பட்டது.<br>விலைப்புள்ளிகளின் விபரம் பக்கம் **1**க்கு நகல், தரமான ஜெராக்ஸ் பேப்பருடன் ஆகும் செலவு குறிப்பிட்டு நகராட்சி அலுவலகத்தில் **19.09.2019** அன்று ஒப்படைக்க விலைப்புள்ளி கோரி அறிவிப்பு செய்யப்பட்டது.<br>**வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம்**<br>**1)** தமிழ்கம்ப்யூட்டர்ஸ், கடலூர் .. பக்கம் **1**க்கு ரூ.**1.00**<br>**2)** திரு.கே.மாரிமுத்து, ஒப்பந்ததாரர், கடலூர் .. பக்கம் **1**க்கு ரூ.**0.95**<br>**3)** நடேஷ் ஜெராக்ஸ், கடலூர் .. பக்கம் **1**க்கு ரூ.**0.80**<br>மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில், வரிசை எண் **3**, நடேஷ் ஜெராக்ஸ், கடலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைந்த அளவில் உள்ளதால், அதனை ஏற்கலாம். |
| **அ.கு.** | **1)** அனுமதிக்கலாம்.<br>**2)** தேர்தல் அவசர பணியை கருத்தில் கொண்டு, முன் அனுமதி ஒப்புதல் வழங்கலாம். |

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 28.09.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
கடலூர் பெருநகராட்சி.